# டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி,

**சென்னை – 104.**

Website: www.draglc.ac.in

Ph:044-25340907

---

நாள்: 23.06.2017

## முதல் பட்டமளிப்பு விழா அழைப்பிதழ்

சட்டக் கல்வி இயக்குநரும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் நடத்தாளர் குழு தலைவருமான **பேரா. முனைவர். திரு. N. S. சந்தோஷ் குமார்**, அவர்களின் தலைமையில் சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப்படிப்பு (B.L., / B.A.B.L.,) இளநிலை பட்டம் பெற்றிடும் பட்டதாரிகளுக்கும் மற்றும் சட்ட மேற்படிப்பு (M.L.,) முதுநிலை பட்டம் பெற்றிடும் பட்டதாரிகளுக்கும் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் முதன் முறையாக பட்டமளிப்பு விழா **(First Graduation day)** வருகின்ற **22.07.2017** காலை **10.00** மணியளவில் **சென்னை உயர்நீதிமன்ற கலையரங்கத்தில்** நடைபெறவுள்ளது.

அவ்விழாவிற்கு சென்னை உயர்நீதிமன்ற **மாண்பமை தலைமை நீதி அரசி செல்வி. இந்திரா பானர்ஜி** அவர்கள் முதன்மை விருந்தினராகவும், **சென்னை உயர்நீதிமன்ற மாண்பமை நீதிபதிகளும்** மற்றும் **தமிழ்நாடு அரசு மாண்பமை சட்ட அமைச்சர்** அவர்களும் பங்கேற்று பட்டச் சான்றிதழ்களை வழங்கி இவ்விழாவினை சிறப்பிக்க இசைந்துள்ளார்கள்.

இப்பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தரும் 3 ஆண்டு சட்டப்படிப்பு பட்டதாரிகள் draglc.3years@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும், 5 ஆண்டு சட்டப்படிப்பு பட்டதாரிகள் draglc.5years@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும், பட்ட மேற்படிப்பு (ML) பட்டதாரிகள் draglc.ml2017@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும் தாங்கள் விழாவில் கலந்து கொள்வதை **10.07.2017-**ற்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும், மேற்கண்ட மின்னஞ்சலில் பதிவு செய்யும் பொழுது தவறாமல் இவ்வழைப்பிதழில் குறிப்பிட்டுள்ள பதிவெண்ணை குறிப்பிடவும் (e.g. **T109 / F304 / P07**). மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட பொறுப்பாசிரியரை தொடர்பு கொள்ளவும். பட்டம் பெற வருகை தரும் பட்டதாரிகள் இவ்விழா அழைப்பிதழின் பின்புறம் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| For Enquiry: | 3 Years BL | - Prof. V. Vijay Karthik (9841707642) |
| | 5 Years BABL & ML | - Prof. M. Sathish Rayan (9840671921) |

முதல்வர்

பெறுநர்,

## அழைப்பாளர்கள் கவனத்திற்கு

1. அழைப்பு கடிதத்தை கண்டிப்பாக உடன் கொண்டு வர வேண்டும்.

2. அரங்கினுள் பட்டம் பெறும் பட்டதாரிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

3. உறவினர்கள் மற்றும் குழந்தைகளை அழைத்து வர வேண்டாம் என தங்களை கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

4. பட்டம் பெறும் பட்டதாரிகள் பட்டமேற்பு சீருடையில் அரங்கத்திற்குள் வரவேண்டும். பட்டமேற்பு சீருடையினை அரங்கிற்கு வெளியே கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. அழைப்பாளர்கள் காலை 9.00 மணிக்கு முன்னதாக இருக்கையில் அமர வேண்டும்.

6. பட்டச் சான்றிதழ் வழங்கும் குழு அணிவகுத்து அரங்கினுள் வரும் போது அனைவரும் எழுந்து நின்று அணிவகுப்பினர் அமர்ந்த பின்னர் தங்களது இருக்கையில் அமர வேண்டும்.

7. பட்டச் சான்றிதழ் வழங்கும் குழு விழா நிறைவுற்று நாட்டுப்பண் இசைக்கும் போதும், பட்டச் சான்றிதழ் வழங்கும் குழு அணிவகுத்து அரங்கை விட்டுச் செல்லும் போதும் அனைவரும் எழுந்து நிற்க வேண்டும்.

8. ஒப்புதல் பெற்ற புகைப்படக்காரர்கள் மட்டுமே நிகழ்ச்சியின் போது புகைப்படம் எடுக்க அனுமதிக்கப்படுவர்.

9. அரங்கிற்குள் கைபேசி, உணவுபொருட்கள் மற்றும் பைகள் ஆகியவை அனுமதிக்கப்படமாட்டாது.

10. பட்டமளிப்பு விழா உறுதி மொழி ஏற்று முடியும் வரை பட்டதாரிகள் விழா அரங்கத்தினை விட்டு வெளியேற வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**Dress Code**:

**Male** : Black Pant, White Shirt, Black Overcoat with Black Tie, Black shoe and the Gown.

**Female** : White Salwar & Black kameez / Saree & Blouse with Black waistcoat and the Gown.

**Note:**

1. The gown can be hired from the counter which will be located nearby the auditorium.

2. This call letter is applicable to the students who have completed their degree till academic year **2014-2015**.